**இறக்காமம் பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 03 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 22 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து இறக்காமம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 10 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட அலுவலகக் கட்டிடத்தின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான கட்டிடத்தின் பெறுமதி கணக்குகளுக்கு நிலையான சொத்தாக கொண்டுவரப்படல் வேண்டும். | இது தொடர்பான ஆவணங்களை உரிய அமைச்சிடம் இருந்து பெற்று இறுதிக்கணக்கறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ii) | 2019 ஆம் ஆண்டிற்காக 03 விளம்பர பதாதைகளுக்கான அறவிடப்பட வேண்டிய கட்டணம் ரூபா 127,500 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் மீளாய்வாண்டின் வருமானமாக வெளிப்படுத்தல். | இக் கட்டணத்தை அறவிடுவதற்கு தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். |

**(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 5,823,890 பெறுமதியான 03 கணக்கு விடயங்களுக்குரியதாக காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் மீதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் | நிலையான சொத்துப் பதிவேட்டில் காணிகட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள் பதியப்படுவதுடன் விபரமான ஆவணச்சான்றுகளை சம்மாந்துறை பிரதேச சபையிலிருந்து சேகரிப்பது |

| | | | |
|---|---|---|---|
| கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | வேண்டும். | | தொடர்பாக எங்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளது. |

## 1.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் மற்றும் விதிகளுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 02 வைப்புக்கள் ரூபா 70,720 தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வைப்புக்களை உரியவர்களுக்கு செலுத்துவதற்கும், வருமான கணக்கிற்கு மாற்றுவதற்கும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 857,490 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 341,092 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 60,000 | 16,970 | 16,970 | -- | 100,000 | 18,250 | 18,250 | -- |
| வாடகைகள் | 1,565,000 | 505,810 | 510,610 | 1,029,223 | 1,980,000 | 920,650 | 1,018,450 | 1,034,023 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 805,000 | 906,450 | 906,450 | -- | 705,000 | 817,410 | 817,410 | -- |
| ஏனைய வருமானம் | 7,076,000 | 6,011,226 | 6,011,226 | -- | 6,021,000 | 3,930,944 | 3,930,944 | -- |
| | 9,506,000 | 7,440,456 | 7,445,256 | 1,029,223 | 8,806,000 | 5,687,254 | 5,785,054 | 1,034,023 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டு 05 தலைப்புகளின் கீழ் உப விதிகள் தொடர்பான பிரேரணைகள் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 வரையிலும் அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத் தப்படல் வேண்டும். | நியம உப விதியினைக் கொண்டு எமது செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருவதுடன் 2014 ஆம் ஆண்டு 05 தலைப்புகளின் கீழ் உப விதிகளை உருவாக்கி இதனை சட்டமாக்கும் பொருட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக கிழக்கு மாகாண சட்டப்பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் அவை பிரசுரிக்கப்படவில்லை. எனினும் 2019 ஆம் ஆண்டு மீண்டும் உப விதிகள் தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை |

#### (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் (PSDG) 01 மில்லியன் நிதியில் இறக்காமம் பிரதேச சபைக்கு திண்மக்கழிவை கொண்டு சேதனப் பசளை | குறிப்பிட்ட கழிவு அரைக்கும் இயந்திரத்தை பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இயந்திரத்தை இயக்குவதற்கு3 phase line மின்சாரம் தேவைப்படுகின்றது தொடர்பாக மின்சாரசபையுடன் தொடர்புகொண்டு 3 phase line பெறுவதற்கான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| தயாரிக்கும் இயந்திரம் வழங்கப்பட்டிருந்தும் அவை மின்சார வசதி இன்றி 03 வருடங்களாக பாவனையின்றி காணப்படுகின்றது. | | மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண குறித்தொகுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2015ஆம் ஆண்டில் ரூபா 1,338,328 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட விலங்கு அறுக்கும் கொல்களமானது அருகாமையில் மயானம் அமைந்துள்ளமையை கருத்தில்கொள்ளாது அமைக்கப்பட்டமையினால் பொதுமக்களின் எதிர்ப்புகளிற்கு மத்தியில் இன்றுவரை பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது. | குறித்த நோக்கம் அல்லது வேறு தேவைகளுக்கு கட்டிடத்தை பயன்படுத்து வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கொள்கலம் அமைப்பதற்கு வேறு இடம் இல்லாத நிலையில் கடந்த சபையினால் சபைத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு கொள்கலம் அமைக்கப்பட்டபோதும் தற்போது அதற்கு அருகாமையில் பௌத்தமயானம் காணப்படுவதனால் அதில் விலங்கு அறுப்பதற்கு பல்வேறு எதிர்ப்புக்கள் ஏற்பட்டது. அதனால் இந்நிலையம் தற்போது திண்மக்கழிவுகளை மீள் சுழற்ச்சி செய்வதற்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையாளம் கண்டு அதனை அடைவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுத்தல். | 2015 - 2030 வரை அடைந்து கொள்ள முயற்சிக்கின்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 17 தொடர்பிலும் எமது பிரதேச சபை கவனம் செலுத்தியே ஒவ்வொரு அபிவிருத்தி செயற்திட்டங்களும் முன் மொழிவுகளும் அனுப்பி வருகின்றது. மேலும் இதன் ஒரு பகுதியாகவே மக்கள் பங்கேற்புடனான வரவு செலவுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வாராந்தம் பாடசாலைகளை துப்பரவு செய்தல், வைத்தியசாலைகளுக்குத் தேவையான களிவகற்றல் செயற்பாட்டுக்கு உதவுதல், சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் போன்றன இதன் அடிப்படையிலயே ஆகும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டிற்காக வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் 14 வகையான வியாபார நிலையங்களிலிருந்து பெறவேண்டிய ரூபா 67,600 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | வியாபார நிலையங்களிட மிருந்து உரிய கட்டணங்களை குறித்த நிதியாண்டில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வருமான பரிசோதகர் வெற்றிடத்திற்கு பதிலாக ஊழியர் ஒருவரை தற்காலிகமான அடிப்படையில் நியமித்திருந்தும் குறித்த ஊழியர் சென்று பார்வையிடும்போது அவ்வியாபார நிறுவனங்கள் தொடர்ந்தும் பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டமையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அலுவலகக் கட்டிடம், பொதுநூல் நிலையம், பொதுச்சந்தை, பொது விளையாட்டு மைதானம் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பாரதீனப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | காணிகட்டிடங்களின் உரிமைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | 2019 ஆம் ஆண்டிற்கான திறந்தவெளி சந்தை குத்தகைக்கு 02 வது கேள்வி கோரலில் ரூபா 253,000 மற்றும் ரூபா.250,000 தொகைகளிற்கு இருவர் கேள்வி வைப்புடன் விண்ணபித்திருந்தனர். ரூபா 253,000 தொகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது. இருப்பினும், குறித்த நபர் பணம் செலுத்த மறுத்திருந்தும் அவரது கேள்வி வைப்புப்பணம் ரூபா 10,000 சபையினால் மீளளிக்கப்பட்டிருந்தது. மேலும், அடுத்த கேள்வியான ரூபா 250,000 தொகைக்கு வழங்காமல் 03 வது முறை கேள்வி கோரல் இடம்பெற்று ரூபா 162,500 தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இதனால் சபைக்கு ரூபா 87,500 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. | கேள்வி நிபந்தனையினை மீறுகின்றவர்களின் கேள்வி வைப்பினை சபை வருமானமாக எடுப்பதுடன் கேள்வி கோரலிற்கமைய ஒப்பந்தத்தினை வழங்குதல். | குடும்பப் பின்னணியினைக் கருத்திற் கொண்டு இவரது வைப்புப் பணம் மீள வழங்கப்பட்டது. 3 வது முறையாகவும் கேள்வி கோரல் இடம்பெற்றது. இதன் போதும் குறிப்பிட்ட நாட்களில் எவரும் விண்ணப்பிக்கவில்லை. எனினும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்களே மீண்டும் கேள்வி விண்ணபத்தினை பெறக் கோரிய போது தவிசாளர் இருவரையும் அழைத்து கலந்துரையாடி இரண்டாம் முறை நடந்த தவறு மீண்டும் ஏற்படாது எனும் உறுதி மொழியினை பெற்ற பின்னர் புதிதாக படிவக்கட்டணம் 2500/- வினை அறவிட்டு புதிய படிவத்தை வழங்குமாறு பணித்ததற்கமைய இவை வழங்கப்பட்டு, இம்முறை ஒருவர் மாத்திரம் விண்ணப்பித்தமையினால் அவருக்கே திறந்த வெளிச்சந்தைக்கான குத்தகை ஒப்பந்தம் வழங்கப்பட்டது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 05 பதவிகளுக்கான ஆளணிகள் மீளாய்வாண்டின் இறுதிவரை நிரப்பப்பட்டிருக்கவில்லை. மேலும், 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்ட சபையின் வருமானப் பரிசோதகர் பதவிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான முறையான நிர்வாக நடவடிக்கைகளை சபை எடுக்க வேண்டும். | வருமானப் பரிசோதகர் வெற்றிடம் தொடர்பாகவும் அதன் தேவையினையும் உணர்த்தித்திணைக்களத் தலைவருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் பலகோரிக்கைக் கடிதங்களை அனுப்பியுள்ளோம். எனினும் இவ் வெற்றிடம் இதுவரை நிரப்பப்படாதுள்ளதுடன் 2020 ஆண்டுஇவ்வெற்றிடம் நிரப்பப்படும் என அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 52,577,947 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதியப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகள் முறையாக இற்றைப்படுத்தி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | காணிகள் மற்றும் கட்டிடங்கள் எமது சபை சம்மாந்துறைப் பிரதேச சபையின் உப அலுவலகமாக இருந்து தனியான பிரதேச சபையாக பிரிக்கப்பட்ட போது சொத்துக்கள் பொறுப்புக்கள் ஒப்படைக்கும் போது இறுதிக்கணக்கறிக்கையில் காட்டப்பட்ட போதும் அது தொடர்பாக ஆவணச் சான்றுகள் எதுவும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான 12 வாகனங்கள் பொதுச்சந்தை வளாகத்தில் உரிய பாதுகாப்பின்றிய நிலையில் காணப்படுகின்றது. | சபையின் வாகனங்களை பாதுகாப்பதற்கான முறையான வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பல்வேறு முயற்சிகளின் பின்னர் 2020 ஆம் ஆண்டுக்கான PSDG செயற்திட்டத்தின் கீழ் சிறுவர் பூங்காவை அண்மித்த வகையில் இவ் வாகனத்தரிப்பிடத்தினை அமைப்பதற்கான முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதுடன் எதிர்வரும் காலங்களில் இப்பிரச்சினை முடிவடையும். |

### 3.4.4 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) UNDP செயற்திட்டத்தின் கீழ் ரூபா 4.975 மில்லியன் செலவில் 2017ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பொதுச்சந்தைக் கட்டிடத்தின் மேல் பகுதி 2020 மே 28 வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது. | பொதுச்சந்தை கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2020 PSDG திட்டத்தில் சில மாற்றங்களை செய்து வாடகைக்கு விடும் வகையில் மாற்றி அமைக்க முன்மொழிவுகள் சமர்பிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் அபிவிருத்தி நிதித் திட்டத்தின் கீழ் ரூபா 4.690 மில்லியன் செலவில் 2018 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட கடைத் தொகுதியானது 2020 மே 28 வரை குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது. | கடைத் தொகுதியினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | இக்கடைத் தொகுதியினை வாடகைக்கு விடும் வகையில் பல்வேறு வங்கிகளை அணுகியுள்ளதுடன் மக்கள் வங்கி தனது கிளையினை மாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. மேலும் இக்கடை தொகுதியினை மிக குறைவான விலைக்கு ஏனையோர் கோரியமையினாலேயே இது வழங்கப்படவில்லை. |

### 3.5. பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம்

**LED மின்குமிழ்கள் கொள்வனவு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இறக்காமம் பிரதேச சபையினால் 150 W LED மின்குமிழ்கள் கூறுவிலை கோரப்பட்டு மீளாய்வாண்டின் போது இரு கட்டமாக ஒன்று ரூபா 16,500 படி 42 மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டு 06 மின்குமிழ்கள் கனியக்கழிவாகவும் பெறப்பட்டு மொத்தமாக ரூபா 693,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் இதே மின்குமிழ்களை காரைதீவு பிரதேச சபையானது ஒன்று ரூபா 9,600 படி கொள்வனவு செய்திருந்தது. இதன் படி இறக்காமம் பிரதேச சபையானது ரூபா 190,800 சிக்கனமற்றமுறையில் இவ் மின்குமிழ்களை கொள்வனவு செய்துள்ளது. | குறித்த விலைவேறுபாடு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு நியாயமான விலையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதினை உறுதிப்படுத்தல். | LED ரக 150w மின்குமிழ்கள் சந்தைகளில் பல விலைகளில் காணப்படுகின்றமையினால் எமது பிரதேச சபை கௌரவ தவிசாளர் உள்ளிட்ட கௌரவ உறுப்பினர்களின் கோரிக்கைக்கமைய தரம் கூடியது எனக் கருதப்படும் மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அது மட்டுமல்லாமல் இவ் LED Light உடன் இணைந்த வகையில் இதனைப் பொருத்துவதற்குத் தேவையான இரும்புக் குழாயினை Handle மற்றும் இதற்கான wire உட்பட set இற்கே கூறுவிலை பெறப்பட்டு 02 வருட உத்தரவாதத்துடனயே இவ் LED ரக மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டன. |